பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 07 புதன்கிழமை (23-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 230

# தமிழர் துன்புறுத்தப்படுவது குறித்து 8 குழுக்கள் அரசுக்கு முறைப்பாடு!

## கொழும்பில் இளம் பெண்கள் கண்டபடி கைதாகின்றனர்

கொழும்பு, ஜூலை 23

கொழும்பில் தமிழர்கள் துன்புறுத்தப்படுவது குறித்து கொழும்பில் உள்ள எட்டு குழுக்கள் அரசுக்கு முறைப்பாடு செய்துள்ளன. இரவு வேளைகளில் இளம் பெண்கள் கண்டபடி கைது செய்யப்பட்டு பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எட்டுக் குழுக்களிலும் அகில இலங்கை இந்து காங்கிரஸ் இந்து கல்விக் கழகம் மற்றும் தமிழர் செயற்குழு ஆகியவையும் அடங்கும்.

கொழும்பு நகரிலுள்ள தமிழர்களின் வீடுகளில் பின் இரவு வேளைகளில் பொலீஸார் திடீர்சோதனைகளை நடத்தி வருவதாகவும்-

பெண்கள் இரவு நேரத்தில் தூக்கத்தில் இருந்து எழுப்பப்பட்டு இரவு நேர ஆடைகளுடனேயே பொலிஸ் நிலையம் வரை நடத்திச்செல்லப் பட்டு தடுத்து வைக்கப்படுகிறார்கள் என்றும் இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொழும்பில் வாழும் தமிழர்களின் உரிமைகளை மதிக்கும் விதத்தில் நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கத்திடம் இக்குழுக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதற்கிடையில் சந்தேக நபர்களென தாம் நம்புபவர்களையே அதிகாரிகள் கைது செய்கிறார்கள் என

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வாழ்த்து மடலுக்குள் குண்டு! றிசேர்வ் பொலீஸ் தப்பினார்!!

மட்டக்களப்பு, ஜூலை 23

மட்டக்களப்பு பிரதிப் பொலீஸ் மா அதிபர் பணிமனைக்கு அனுப்பிவைக்கப்பட்ட வாழ்த்து மடல் ஒன்றுக்குள் சுமார் 25 கிறாம் நிறையுள்ள குண்டு ஒன்று இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இராணுவத்தின் குண்டு செயலிழக்கும் பிரிவால் அந்த மினிக் குண்டு செயலிழக்க செய்யப்பட்டது.

நேற்று நண்பகல் 12.45 மணியளவில் பிரதிப் பொலீஸ் மா அதிபர் பணிமனையில் பணியாற்றும் 'றிசேர்வ்' பொலீஸார் ஒருவருக்கே இந்த வாழ்த்து மடல் தபாலில் வந்தது.

வாழ்த்து மடல் வழமையை விட சிறிது பாரமாக இருக்கவே சந்தேகம் கொண்ட அந்த றிசேர்வ் பொலீஸ் காரர் இராணுவத்தினருக்கு அறிவித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10-21)

## மட்டக்களப்பில் படையினரின் லீவுகள் ரத்து!

கொழும்பு, ஜூலை 23

மட்டக்களப்பு மாவட்டத்தில் பணிபுரியும் இராணுவத்தினர், பொலீஸார் ஆகியோரின் லீவுகள் நேற்று முன்தினம் முதல் ரத்துச் செய்யப் பட்டுள்ளன.

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தப் போவதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவலையடுத்தே

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சித்தாண்டி மோதலில் இறந்ததாக 6 சடலங்கள் மட்டுமே கையளிப்பு!

சித்தாண்டிப் பகுதியில் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம் பெற்ற மோதலில் கொல்லப்பட்டதாக 6 விடுதலைப் புலிகளின் சடலங்கள் மட்டுமே நேற்று சித்தாண்டி இராணுவ முகாமில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேச குழுவிடம் படையினரால் கையளிக்கப்பட்டன.

சடலங்களைப் பொறுப்பேற்ற செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அவற்றை செங்கலடி-பதுளை வீதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பணிமனையில் ஒப்படைத்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சித்தாண்டியில் கடந்த திங்களன்று இராணுவத்தால் 58 புலிகள் கொல்லப்பட்டனர் எனவும் —

கொல்லப்பட்ட 32 புலிகளின் சடலங்களும் 26 துப்பாக்கிகள் மற்றும் யுத்த உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன என்றும் — இராணுவத் தரப்பினர் தெரிவித்திருந்தனர். (இ-10-21)

## ஈழத் தமிழர்கள் பிரச்சினைக்கு ராணுவ தாக்குதல்-அரசியல் தீர்வு

### இதுவே சாத்தியமான ஒரே வழி என்கிறார் கதிர்காமர்

கொழும்பு, ஜூலை 23

ஈழத்தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தாக்குதலும் — அரசியல் தீர்வும் இணைந்த அணுகுமுறைதான் இன்றைய நிலையில் சாத்தியமான ஒரே வழி.

மேற்கண்டவாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் றோய்ட்டர் நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இதற்கு மாற்றாக ஒரே ஒரு வழி மட்டும் உண்டு; அது விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு தனி ஈழம் கொடுப்பது. ஆனால் நிச்சயமாக அது நடக்கக் கூடிய காரியம் அல்ல என்றும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



இரண்டுமே ஆமை வேகத்தில் தான் போகுது பாருங்கோ!...

## இலங்கை தூதரகம்முன் பேரணி

சென்னை, ஜூலை 23

இந்த மாதம் 26 ஆம் திகதி திராவிடக் கழகம், அ. தி. மு. க., மறுமலர்ச்சி தி. மு. க. பாட்டாளி மக்கள் கட்சி ஆகியன கச்சதீவு மீட்பு மாநாட்டையும் பேரணியையும் இராமேஸ்வரத்தில் நடத்தத் தீர்மானித்துள்ள அதே வேளை ஜனதா தளக் கட்சியினர் தலைவர் சுப்பிர

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 'வெற்றி உறுதி' ராணுவ நடவடிக்கை தொடர்வதாக அரசு அறிவிப்பு

### ஆனால் படைநகர்வு இன்னும் இல்லை

கொழும்பு, ஜூலை 23

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை தொடர்வதாக நேற்றும் அரசு அறிவித்தது.

எனினும் படை நகர்வு இடம் பெற்றதாகத் தகவல் எதுவும் இல்லை.

படையினருக்குத் தேவையான ஆளணி மற்றும் ஆயுத தளபாடங்கள் போதிய அளவு வந்துசேர்ந்த பின்னரே படை நகர்வு ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாண்டிக்குளத்தில் இருந்து புளியங்குளம் வரை நகர்ந்த 55 ஆவது படையணி விடுதலைப் புலிகளினால் இரு தடவைகள் தாக்கப்பட்டதும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழருக்கு ஆதரவாக தமிழகத்தில் உண்ணாவிரதம்

### தமிழ் அறிஞர் - தமிழ் அமைப்புகள்

கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் நடக்கும் உள்நாட்டு யுத்தத்தை நிறுத்தி அப்பாவித் தமிழ் மக்களைப் பாதுகாக்க மத்திய அரசு இலங்கை அரசுடன் பேச்சு நடத்தவேண்டும்.

மேற்கண்ட கோரிக்கையை வலியுறுத்தித் தமிழகத்தில் உள்ள தமிழ் அறிஞர்களும், தமிழ் அமைப்புப் பிரதிநிதிகளும் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

கடந்த சனிக்கிழமை சைதாப்பேட்டையில் இடம்பெற்ற இந்தப் போராட்டம் பன்னாட்டுத் தமிழ் சங்கத் தலைவர் மு. சேதுராமன் தலைமையில் நடந்தது.

தமிழ்நாடு தமிழ்ச்சங்கப் பொதுச் செயலாளர் சுந்தரதாஸ் மற்றும் மா. நன்னன், தெய்வநாயகம், பா. ஜனார்த்தனன் உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர். (இ-3-150)

## மகரஹமப் பகுதியில் 2 பொலீஸார் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டனர்

### ரூ. $2\frac{1}{2}$ லட்சம் அபகரிப்பு!

கொழும்பு, ஜூலை 23

பட்டப்பகலில் இரு பொலீஸார் சுட்டுக்கொல்லப்பட்டனர். வங்கியில் வைப்பிலிட எடுத்துச் செல்லப்பட்ட இரண்டரை லட்சம் ரூபா பணம் துப்பாக்கி நபர்களினால் அபகரித்துச் செல்லப்பட்டது.

மகரஹமவில் நேற்று இச் சம்பவம் இடம்பெற்றது.

மகரஹம கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் விற்பனைப்பணமே அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

பணம் வான் ஒன்றில் இரு பொலீஸார் சகிதம் எடுத்துச் செல்லப்பட்டபோது, அந்த வானைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அந்த வான் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

வலிகாமம் தென் மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 34½ வருடங்கள் அதி உன்னத கிராமசேவையாளராக சேவையாற்றி 23 - 07 - 97 இல் இளைப்பாறும்

**திரு. செல்லையா வேதராசா**

அவர்கள் நீடூழி வாழ்கவென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய். (47341)

## வாழ்த்துகின்றோம்

எங்கள் சங்க அங்கத்தவர்

**லயன் செல்லையா வேதராசா**

அவர்கள்

கிராம சேவை அலுவலராக 34 1/2 வருடங்கள் சேவை ஆற்றிய பின் 23-07-1997 இல் இளைப்பாறுவதால் அவர் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்தும்.

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்
மானிப்பாய். (47340)

## வாழ்த்துகின்றோம்

எமது கிராம அலுவலராக கடந்த 34 1/2 வருடங்கள் சிறந்த சேவையாற்றி 23-07-97 இல் இளைப்பாறும்.

உயர்திரு

**செல்லையா வேதராசா**

அவர்களை சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

தர்மரூபன் பல்பொருள் களஞ்சியம்
சந்தையடி, மானிப்பாய்.
(47342)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் உப அதிபர்
திருமதி ப. பத்மநாதன் அவர்களின் அருமை மகன்

**ப. முரளிக்குமார் அவர்கள்**

நோர்வேயில் அகால மரணமானதையிட்டு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/ இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (சி/1177)

## சமய சந்நிதிகளில்

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 15 நாள்கள் உற்சவம் இடம்பெறும்.

அடுத்தமாதம் 5 ஆம் திகதி தேர் உற்சவமும், 6 ஆம்திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ஐ-30)

### கோரிக்கை

நெடுந்தீவு ஜூலை 23

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையை பிரதேச செயலகமாக தரம் உயர்த்துமாறு நெடுந்தீவு பிரசைகள்குழு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டகிளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ-111)

### அராலியில் விசேட அ. அட்டை

வட்டு. ஜூலை 23

அராலி மேற்கு (ஜே-160), அராலி மத்தி (ஜே - 161), அராலி தெற்கு (ஜே - 162), அராலி கிழக்கு (ஜே - 163). அராலி வடக்கு (ஜே - 164), ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை மறுதினம் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3.00 மணி வரை அராலி மத்தி (ஜே - 161) கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் வைத்துவழங்கப்படவுள்ளன. (ஐ-12)

### படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூலை 23

கொக்குவில், தாவடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய்ப் பகுதிகளில் நேற்றுக்காலை இராணுவம் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டது. (இ-15)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 07 — 06 — 1940

மறைவு: 23 — 07 — 1985

**திருமதி லூட்ஸ் மாக்கிறெட் றோஸ் தேவதாஸ்**

**(சரோஜினி)**

ஆண்டு பன்னிரண்டு ஆகுதம்மா
ஆண்டவன் ஒளி தெரியுதம்மா
வேண்டும் என்றே தவமிருந்தோம்
தாண்டியெமைப் பிரிந்தீரம்மா
காலமெல்லாம் எம் வாழ்வில்
குல விளக்காய் திகழ்வீரம்மா
முன்னை நின்று வழி நடத்த
அன்னை உமது ஆசியம்மா.

- குடும்பத்தினர்.

28/1, சோமசுந்தரம் லேன்,
யாழ்ப்பாணம்.
Melbourne,
Australia (48530)

## மரண அறிவித்தல்கள்

### தனிகாசலம் நேசம்மா

கோப்பாய் காளிகோயிலடியைச் சேர்ந்த தனிகாசலம் நேசம்மா 19-07-1997 சனியன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை தனிகாசலம் அவர்களின் அன்பு மனைவியும், மங்களம். இராசையா, இராசலிங்கம் (பொம்மன்), லில்லியம்மா, ஆகியோரின் சகோதரியும், அம்பிகை, சோமஸ்கந்தராசா (ஜேர்மனி), அகிலரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா (ஜேர்மனி), கலா (ஜேர்மனி), அனிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுலக்சன், டிலக்சன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23-07-97 புதன்கிழமை (இன்று) கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும். கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. இராசையா
(சகோதரன்)

காளிகோயிலடி,
கோப்பாய் மத்தி. (48523)

### சோமசுந்தரம் சிவராமலிங்கம்

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த டாக்டர் சோ. சிவராமலிங்கம் 22-07-97 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் கந்தரோடையைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் திரு. திருமதி சின்னத்தம்பியின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், கலைமதி (ஆஸ்திரேலியா), டாக்டர் கலைச்செல்வி (ஆஸ்திரேலியா), கலைராஜி (சிங்கப்பூர்), கலைவாணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
சி. மார்க்கண்டன்
(மைத்துனர்)

இல. 5, இராமகிருஷ்ண ரெறேஸ்,
வெள்ளவத்தை. 48535)

### பத்மநாதன் முரளிக்குமார்

(பழைய மாணவன் கொக்குவில் இந்துக்கல்லூரி உயர்தரம்- 1995 – கலை)

நயினா தீவைப்பிறப்பிடமாகவும் இலக்கம் 3 அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு சுன்னாகத்தில் வசித்த வருமாகிய பத்மநாதன் முரளிக்குமார் நோர்வேயில் 21-07-97 அன்று அகாலமரணமானார்.

இவர் கணபதிப்பிள்ளை பத்மநாதன் (நிதி உதவியாளர், பிரதேச செயலகம் உடுவில்) - பத்மநாதன் பரிமளம் (பிரதி அதிபர் இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்) ஆகியோரின் அன்பு மகனும் ஸ்ரீகுமார், மீரா ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
க. பத்மநாதன்
(தந்தை)

இல. 3. அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (48534)


யாழ். வலயக் கல்வித் திணைக்கள I, நலன்புரிக் கழகத்தின்

**மென்பந்து கிரிக்கெட் போட்டி - 1997**

**இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்**

யாழ். வலயக் கல்வித் திணைக்கள I, நலன்புரிக் கழகத்தினால் திரு. ஆ. ஜெயக்குமாரன் (உரிமையாளர் பி. ஜெ. பர்னான்டோ, மூக்குக் கண்ணாடியகம்) அவர்களின் ஆதரவுடன், யாழ். மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய கழகங்கள், திணைக்களங்களுக்கிடையிலான மேற்படி போட்டிகள் இம்மாதம் 18, 19, 20ஆம் திகதிகளில் நடைபெற்றன. இப் போட்டிகளின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு வைபவமும் 23 - 07 - 1997 புதன்கிழமை இடம்பெறவுள்ளன.

இடம்: யாழ். மத்திய கல்லூரி மைதானம்
காலம்: பிற்பகல் 2.00 மணி (இலங்கை நேரம்)
தலைவர்: திரு. செ. மெற்றாஸ்மயில் (தலைவர், நலன்புரிக்கழகம்)
பிரதம விருந்தினர்: திரு. சு. இரத்தினராசா (நலன்புரிக் கழகத்தின் காப்பாளரும், வலயம் I கல்விப் பணிப்பாளரும், யாழ்ப்பாணம்.)
சிறப்பு விருந்தினர்: திரு. திருமதி ஜெயக்குமாரன் (உரிமையாளர்: பி. ஜெ. பர்னான்டோ மூக்குக் கண்ணாடியகம், 542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)

அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
யாழ். வலயக் கல்வித் திணைக்கள I. நலன் புரிக்கழகம்.

முக அமைப்பிற்கு ஏற்றவாறு மூக்குக் கண்ணாடிகளைத் தெரிவுசெய்வதற்கும் சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்வதற்கும் நீண்டகால அனுபவமுள்ளவர்கள், உங்கள் கண்களைச் சரியான முறையில் பரிசோதித்து மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ள நாடவேண்டியவர்கள்!



பி. ஜெ.
பர்னான்டோ
[மூக்குக் கண்ணாடியகமும்,
பல்கட்டும் நிலையமும்]



542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (48529)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் - சாந்திபாஹினி பேச்சில் உடன்பாடு எட்டவில்லை

டாக்கா, ஜூலை 23

பங்களாதேஷ் அரசுக்கும் சாந்தி பாஹினி இயக்கத்துக்கும் இடையே கடந்த வாரம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் எவ்வித இணக்கமும் ஏற்படாமலேயே முடிவடைந்ததாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

பங்களாதேஷ் சிட்டகொங்மலைப் பிரதேசத்தில் சுயாட்சி கோரி ''சாந்தி பாஹினி'' கெரில்லா இயக்கம் கடந்த இருபது ஆண்டு காலமாகப் போராடி வருகிறது.

இந்த மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இரு தரப்பாரிடையேயும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

இந்தப் பேச்சுக்களில் இணக்கநிலை எட்டப்படாததை அடுத்து பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட ''சாந்தி பாஹினி'' அரசியல் பிரிவின் தலைவர் ஜோதீந்திர போதிப்பிரிய வர்மா தலைமையிலான குழுவினர் டாக்காவில் இருந்து இராணுவ ஹெலிக்கொப்ரர் மூலம் சிட்டகொங்மலைப் பகுதிக்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஐந்து நாள்கள் நடைபெற்ற பேச்சுக்களின் போது பங்களாதேஷ் அரசுத் தரப்பின் குழுவுக்கு நாடாளுமன்ற பிரதம கொரடா அப்துல் ஹஸனத் அப்துல்லா தலைமை வகித்தார். (ஐ)

# தலிபான் தரப்பில் 800 பேர் மரணம்!

## சண்டையை நிறுத்த பாகிஸ்தான் முயற்சி?

இஸ்லாமாபாத், ஜூலை 23

ஆப்கானிஸ்தானில் தலிபான் எதிர்ப்புக் கூட்டணிப் படையினர் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் நடத்திய திடீர்த் தாக்குதல்களில் தலிபான் போராளிகள் சுமார் 800 பேர் பலியானதாகவும், ஆயிரம் பேர்வரையில் காயமடைந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தலிபான்கள் பரவலாக நிலைகொண்டிருந்த பகுதிகளில் இடம்பெற்ற உக்கிர சண்டைகளில் 500 தலிபான்கள் கொல்லப்பட்டதாக முன்னர் வெளியான தகவல்கள் தெரிவித்தன.

இச் சண்டையின் போது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சரிகா என்னும் நகரத்தை தலிபான் படைகள் இழந்தன. இது மிக மோசமான இழப்பு என ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சரிகா நகர் வீழ்ச்சியடைந்ததால் நாட்டின் ஏனைய பகுதிகளில் நிலைகொண்டுள்ள தலிபான்படையினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தற்போது இவர்கள் எதிர்த்தாக்குதல் ஒன்றை நடத்தத்திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — ஆப்கானிஸ்தானில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் பாகிஸ்தான் ஈடுபட்டிருக்கிறது. இது தொடர்பான முயற்சியாக பாகிஸ்தான் பிரதமரின் விசேட தூதர் ஒருவர் ஆப்கான் சென்றுள்ளதாக ஏ. எப். பி செய்தி தெரிவித்தது. (ஐ)

# கம்போடிய தலைநகரில் உள்ள தாய்வான் நிலையம் மூடப்பட்டது

நொம் பென், ஜூலை 23

கம்போடியாவின் தலைநகர் நொம்பெனில் உள்ள தாய்வானின் பிரதிநிதி அலுவலகம் பயங்கரவாதத்துக்குத் தூபம் இடுகின்றது என்ற குற்றச் சாட்டின் பேரில் கம்போடிய அதிகாரிகளால் மூடப்பட்டுள்ளது.

முதலாவது பிரதமர் இளவரசர் நொரடோம் றணரித் இந்த மாத ஆரம்பத்தில் பதவி கவிழ்க்கப்பட்டதில் இருந்து தாய்வானின் பொருளாதார கலாசார பிரதிநிதியின் அலுவலகம் மூடப்பட்டுள்ளது.

றணரித்தின் படைகளுக்கும் ஹுன்செனின் படைகளுக்கும் இடையே இன்னமும் பலத்த சண்டைகள் இடம்பெற்று வருகின்றன.

சில தாய்வான் நாட்டு நிபுணர்கள் இளவரசர் றணரித்தின் கட்சிக்கு ஆதரவு அளிப்பதாகவும், சட்டவிரோத ஆயுதங்களை இறக்குமதி செய்வதாகவும் ஹுன்சென் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஆனால் தாய்வான் இக் குற்றச் சாட்டை மறுத்துள்ளது. ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடவில்லை என்று அது தெரிவித்துள்ளது. (ஐ-3)

# 6 மாதங்களில் 5 ஆயிரம் வீதி விபத்து

புதுடில்லி, ஜூலை 23

புதுடில்லி நகரில் கடந்த ஆறு மாதங்களில் சுமார் 5 ஆயிரம் வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இந்த விபத்துக்களினால் ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

பெரும்பாலான வீதி விபத்துகளுக்கு வீதிகளில் அலைந்து திரியும் மாடுகளும் காரணம் என்று ''ரைம்ஸ் ஒவ் இந்தியா'' தெரிவித்துள்ளது. (ஐ)

# பெண்கள் நடந்தால் ஒலி எழக் கூடாது!

## தலிபானின் கடும் உத்தரவு

காபூல், ஜூலை 23

காபூல் நகரில் உள்ள பெண்கள் மீது தலிபான் இயக்கம் பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

பெண்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்க வேண்டும்; மருத்துவசேவை தவிர வேறு எந்த வெளிவேலையிலும் பெண்கள் ஈடுபடக்கூடாது. வெளியே செல்லும் போது பெண்களின் காலணிகளில் இருந்து சத்தம் வெளிவரக் கூடாது; நடக்கும் போதும் ஒலி எழக் கூடாது. வாகனங்களில் செல்லும் பெண்கள் சாரதிக்கு அருகே உள்ள ஆசனத்தில் அமரக் கூடாது. வெளிநாட்டு ஆள்கள் இருக்கும் வாகனங்களில் பெண்கள் பயணம் செய்யக் கூடாது— என்று தலிபான் இயக்கம் உத்தரவிட்டிருக்கிறது.

தலிபானின் முட்டாள் தனமான இந்தக் கட்டுப்பாடுகள் பெரும் வியப்பையும்; கேலியையும் உருவாக்கியிருக்கின்றன.

ஆப்கானிஸ்தானின் பெரும் பகுதியில் அதிகாரம் செலுத்தி வரும் தலிபான் இயக்கம் ஆண்கள் தங்கள் தாடியை மழிக்கக் கூடாது என்று ஏற்கனவே கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஐ)

# சீனாவில் வெள்ளத்தால் 164 பேர் பலி!

சீனாவின் தென்மேற்கு மாகாணமான ஜியுஜோவில் கடும் மழையை அடுத்து பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால் 164 பேர் வரை உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுமார் 70 லட்சம்பேர் வரை பாதிக்கப்பட்டிருப்பதாகசீன அரசாங்க வானொலியை மேற்கோள் காட்டி வெளியான செய்திகள் தெரிவித்தன. (ஐ)

## மண் சரிவு

கேரளா மாநிலத்தில் இடுக்கி மாவட்டத்தில்பெய்த பலத்த மழையை அடுத்து ஏற்பட்ட மண்சரிவுகளினால் 12 பேர் பலியாகியுள்ளனர். ஐவரைக் காணவில்லை.

# பிஜி நாட்டில் புதிய அரசமைப்பு

பிஜி நாட்டில் இனசார்பற்ற புதியஅரசமைப்பு வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரவுள்ளது.

பல்வேறு இனங்களைச் சேர்ந்தவர்கள், பல்வேறு கலாசார மரபுடையவர்கள் ஒன்று சேர்ந்து வாழவும் பலரது நன்மைக்காக உழைக்கவும் இப் புதிய அரசமைப்பு வழி செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய அரசமைப்பின் படி 71 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 23 இடங்கள் பிஜி நாட்டவருக்கும், 19 இடங்கள் அங்குள்ள இந்தியர்களுக்கும், 3 இடங்கள் கலப்பு இனத்தவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. 25 இடங்கள் பொதுவாக வேறு எந்த இனத்தை சேர்ந்தவருக்கும் என்று ஒதுக்கப்பட்டுள்ளன. (ஐ)

## கம்போடிய நெருக்கடிக்கு

# ஆசியானின் மத்தியஸ்தத்தை அமெரிக்கா வலியுறுத்துகிறது!

நியுயோர்க், ஜூலை 23

ஆசியானின் மத்தியஸ்த முயற்சியில் ஒத்துழைப்பதில்லை என்ற முடிவை மறு பரிசீலனை செய்யுமாறு கம்போடியாவின் இரண்டாவது பிரதமர் ஹுன்செனை அமெரிக்கா கேட்டுள்ளது.

கம்போடிய நெருக்கடிக்கு இத்தகைய மத்தியஸ்தம் முயற்சி அவசியமானது ஆக்கபூர்வமானதும் ஆகும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சுப் பிரதிநிதி நிக்கலஸ் பேர்ண் தெரிவித்தார்.

கம்போடியாவில் இடம் பெறும் சம்பவங்கள் குறித்து கருத்து வெளியிட அமெரிக்காவுக்கும், ஏனைய நாடுகளுக்கும் உரிமை உண்டு என்றும் அவர் கூறினார்.

# அனல் மின் நிலையத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவுக!

## கொழும்புக் கூட்டத்தில் துணைவேந்தர் கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் 25 மெகாவாட்ஸ் வலுவுள்ள அனல் மின்சார நிலையம் ஒன்றை உடன் அமைக்க வேண்டும் - என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் அவர் கொழும்பு சென்ற சமயம் வடமாகாண மீள் குடியமர்வு புனரமைப்பு அதிகார சபையின் கூட்டத்தில் பங்கு பற்றினார்.

அக் கூட்டத்தில் வைத்தே இக் கோரிக்கையை அவர் விடுத்தார்.

யாழ்ப்பாணப் மக்களின் பொருளாதார, சமூக, கல்வி நடவடிக்கைகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டுமானால், அங்கு 24 மணி நேர மின்சார விநியோகம் வழங்கப்படவேண்டியது அவசியமாகின்றது.

இதற்கு வசதியாக25மெகா வாட்ஸ் வலுவுள்ள அனல் மின் நிலையம் ஒன்றை அங்கு அமைக்க வேண்டும்.

யாழ். போதனா வைத்தியசாலையைத் திறம்பட இயக்க தேவையான சகல ஏற்பாடுகளையும் செய்யவேண்டும். அப்போது யாழ். மருத்துவ பீடமும் முறையாகத் தனது பணிகளை மேற்கொள்ள முடியும். அத்துடன் நோயாளர்கள் கொழும்பு செல்ல வேண்டிய நிலையும் ஏற்படமாட்டாது என்று பேராசிரியர் அக் கூட்டத்தில் எடுத்துக் கூறினார். (ஐ-3)

## மக்கள் தொடர்பு அலுவலகம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

பொதுமக்கள் நலன் கருதி யாழ். பொலீஸ் நிலையத்தில் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஆனந்த வெவ்கம இந்த அலுவலகத்தை கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார். (ஐ-3)

# செஞ். குழுவின் கப்பலில் தபால் பொதிகள் வரும்

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு பிரதி புதன்கிழமைகளில் சேவையில் ஈடுபடும் செஞ்சிலுவைச்சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பலில் தபால் பொதிகளை எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடபிராந்திய பிரதி அஞ்சல் மா நாயகமான எஸ். மாணிக்கவாசகர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த ஏற்பாட்டின் பிரகாரம் இன்று காங்கேசன் துறை வரும் இக்கப்பலில் 25 தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஏனைய சரக்குக்கப்பல்களிலும் தபால் பொதிகள் எடுத்துவரப்படும். (ஐ-3)

# தியவன்ன ஓயாவில் பெண்ணின் சடலம்!

கொழும்பு, ஜூலை 23

கொழும்பு தியவன்ன ஓயாவில் சாக்கில் கட்டப்பட்ட நிலையில் வீசப்பட்டிருந்த பெண் ஒருவரின் சடலத்தை பொலீஸார் மீட்டுள்ளனர்.

தியவன்ன வாவிக்கு அருகில் உள்ள கால்வாய்ப் பகுதியில் இச் சடலம் காணப்பட்டது. சாக்கில் கட்டப்பட்டுக் கிடந்த பெண்ணின் சடலத்தில் எவ்வித காயமும் காணப்படவில்லை. இவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டிருக்கலாம் எனப் பொலீஸார் கூறினர்.

கொலைக்கான காரணம் தெரியவில்லை என்றும் ஆனால் இது பாதாள உலகக் கும்பலின் வேலையாக இருக்கலாம் என்றும் பொலீஸார் கருதுகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ் நிலையப் பகுதியில் வெள்ளம்

கொழும்புத்துறை, ஜூலை 23

மழை பெய்ததை அடுத்து யாழ். மத்திய பஸ் நிலையப் பகுதியில் பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதைக் காணமுடிகிறது.

இதனால் பஸ் நிலையத்தில் பெரும் எண்ணிக்கையில் கூடும் பயணிகளுக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

(ஐ-30)

## ஆண்டு விழா

நல்லூர், ஜூலை 23

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி தனது 175 ஆவது ஆண்டுப் பூர்த்தி விழாவை அடுத்த ஆண்டு மே மாதம் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் கொண்டாடவுள்ளது.


# இரா. ந. வீரப்பனார் அறக்கட்டளை

## திருக்குறள் தமிழியக் கழகம்

43, வள்ளலார்வழி - புதுச்சேரி - தென்னிந்தியா
பதிவு இலக்கம்: 2114 – 96 - பாண்டிச்சேரி.

தலைமையகம்:
உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம்
கிள்ளான் மலேசியா. கிளை: யாழ்ப்பாணம் (1974)

## அறக்கட்டளையின்
## ★ நோக்கமும் திட்டமும் ★

1. பழந்தமிழ்ப் பாடல் தொகுதியான திருக்குறள் மேம்பாட்டுக்கென ஒரு தனி நிதி ஏற்படுத்தல். இந்த அறக்கட்டளையின் நிதி ஏற்படுத்துவதற்கான குறிக்கோள்களாவன:-

(அ) திருக்குறள் என்னும் தமிழ் (வேதம்) மறையை வளர்ப்பது – மேம்படுத்துவது – கற்பது
(ஆ) திருக்குறளைக் கற்க விரும்புவோர்க்கு இலவசமாகக் கற்றுத் தருவது.
(இ) திருக்குறள் பற்றி ஆய்வு நடத்தவோ கற்கவோ விரும்புபவர்க்கு இலவச உணவு, உறைவிடம் வழங்குவது.
(ஈ) திருக்குறளை மேம்படுத்துவது ஆழமாக ஆய்வு செய்வது.
(உ) உலகத் தமிழ் மறையாம் திருக்குறள் நன்னெறிக் கோட்பாடுகளைப் பரப்புவதும்-வாழ்வியலில் பின்பற்றச் செய்வதும் தமிழர் வாழ்வியலில் நடைபெறும் எல்லா மங்கல, அமங்கல நிகழ்வுகளிலும் திருக்குறளுக்கு முன்னுரிமை வழங்கச் செய்தல்.

2. இவ்வறக் கட்டளைப் பணிகளின் நடவடிக்கை:-

எவ்விதமான இலாப எண்ணமோ, வருமானக் குறிக்கோளோ இல்லாமல் நடந்தேறும்.

3. இயங்குமிடம்:-

புதுச்சேரி உழவர்கரை, சின்னகாலாட்பட்டு என்ற நிலத்தில் இது இயங்கும். இந்த இடமும் மண்ணும் அறக்கட்டளை இயங்குமிடமாகும்.

அறக்கட்டளை பதிவாகி விட்டது. ஒன்பது பேர் இதன் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டனர். அறக்கட்டளையான இதற்கு சட்டப்படியான முதல் நிதி ரூபா 25,000/- செலுத்தப்பட்டு விட்டது.

ஓர் ஏக்கர் நிலத்துக்குச் சற்று குறைவான நிலத்துக்குச் சுற்றுச் சுவர் போடப்பட்டு வருகிறது. 1996 முதல் 2000க்குள் (ஐந்தாண்டுக்குள்) கட்டுமான வேலைகள் தொடர்ந்து நடந்து முடிவுறும். அவை இவ்வாறு இருக்கும். நூலகம், ஆவணக் காப்பகம், பழஞ்சுவடியகம், அரும் பொருட் கூடம், கலையகம், படிப்பகம், முதன் முதலில் உறைவிட விடுதிகள் கட்டப்படும். பிறகு கல்லூரிக் கட்டடம் அமையும் இக்கட்டடம் ''திருக்குறள் தமிழியக் கழகம்'' எனப்படும். கட்டடச் சூழல் ''திருவள்ளுவர் வளாகம்'' என்பதாகும். வரைபடங்கள் வரையப்பட்டு வருகின்றன. 1997 இறுதியில் இது முடியும். புதுச்சேரியில் இருந்து வடக்கே 10 கி. மீ தூரமாகும் இது. நிலவிலை உட்பட எல்லாச் செலவினங்களும் ஆறு இலட்சம் ரூபா ஆகியது. சுவரமைப்பு கட்டுமானச் செலவு வேறு. முதலீட்டு மூலவரான முதல்வர் பெயரில் இச் செலவினங்கள் செய்யப்பட்டன. அறங்காவலர்களில் மாறுதல்கள் ஏற்படலாம். புதியவர்கள் நியமனம் பெறலாம். இவைகளை நிறைவேற்ற இருபது இலட்சம் ரூபா நிதி தேவை.

இந்நிதிகள் புதுச்சேரி உட்பட தமிழ் நாட்டிலும், இந்தியாவிலும் பிற வெளி நாடுகளிலும் திரட்டப்படும். எவ்வகையான நிதிக்கொடைகளுக்கும் பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படும். சட்டப்படியான வரவு செலவுக் கணக்குகள் வைக்கப்படுவதுடன் உரியவர்களுக்கு வழங்கப்படும். ஒரு பங்கு நிதியைச் செலுத்தி அறங்காவலராகலாம். நிதியைச் செலுத்தி பங்குதாரரானால் இவர்களும் அறங்காவலராகலாம். பங்குக்கான கொடைகளும் பொது நிதிகளும் கனிவுடன் வரவேற்கப்படுகின்றன. உலகளாவிய தமிழியக்கங்களும், பொதுப்பணி இயக்கங்களும் நன்கொடை வழங்கி 2000 ஆம் ஆண்டுக்குள் இத் திட்டத்தை வெற்றிபெறச் செய்ய வேண்டும். கொடை உள்ளம் கொண்ட சான்றோர்களின் பெயர்கள் உரிய மண்டபத்தின் பெயர்களாகச் சூட்டப்படும்.

பங்குதாரருக்கான ஒரு பங்குக் கொடையான நிதி முதலீடு ஏறத்தாழ பத்தாயிரம் ரூபாய்க்குக் குறையாது. ரூபா பத்தாயிரத்துக்குக் குறைவான நிதி வரவு நன்கொடையில் சேர்க்கப்படும். இது பங்குப் பணமாகாது. இந்த நான்கு ஆண்டுகளில் தொடர்ந்து வழங்கிவரும் வளரும் நிதி பங்குப் பணமான தொகையில் சேர்க்கப்படும்.

### பன் மொழிகளில் திருக்குறள்

திருக்குறள் தமிழியக் கழகம் கல்லூரியாகவும் ஆய்வகமாகவும் திகழும். இதில் சிறுவர்களான மாணவர் பயிலும் பள்ளியாக அமைக்க முடியாது. தங்கிப் படிப்போர்க்கே முன் உரிமை உண்டு. கட்டணமில்லை. பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் இலவசமாகப் பணியாற்றுவர்.

தமிழில் மட்டும் மறைக்கல்வியாகக் கற்பிக்கப்படும். பிறகு படிப்படியாக, ஆங்கிலம் பிரஞ்சு, செர்மன், மலாய், சீனம் ஆகிய மொழிகளிலும் இந்தியப் பன்மொழிகளிலும் திருக்குறள் தெளிவுறக் கற்பிக்கப்படும். இது போல் இம்மொழிகளின் ஆய்வுத்துறைகள் அமைந்து இயங்கும். பிறமொழி திருக்குறள் பதிப்பு நூல்களை வாங்கிச் செப்பமுறப் பதிப்பிட்டு வெளியிடப்படும்.

பரிசு — விருது — பொற்கிழி வழங்கிச் சிறப்பிக்கப்படும். உலகளாவிய திட்டம் இதற்கு உண்டு. எனவே உலகத்தமிழர்கள் இதற்கு அருளும் – பொருளும் தந்து அறிவுரைவழங்கி ஆதரிக்க வேண்டுகிறோம். நன்றி, வணக்கம்.

வீட்டுக்கு வீடு திருக்குறள் ஓதுவோம்
வாழ்க வையகம
வளர்க திருக்குறள் நெறி
மலர்க திருக்குறள் சமுதாயம்

திருக்குறள் நம் வாழ்வியல் வேதம் திருவள்ளுவர் நம் வழிகாட்டி

விளம்பர அன்பளிப்பு:
விநாயகர் தருமநிதிய சமூக சேவை,
பருத்தித்துறை, இலங்கை.

(48524)


மக்கள் மீளக்குடியமர வசதியாக

## வலி.வடக்கில் அவசரவேலை திட்டம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை

''வலி. வடக்குப் பகுதியில் மேற்கொள்ள வேண்டிய அவசர வேலைத் திட்டங்கள் குறித்த விவரங்கள் எமக்குத் தரப்படாததாலேயே, அங்கு தகுதி மீள்குடியமர்வு தாமதமடைகிறது''.

சர்வதேச தொண்டர் அமைப்புப் பிரதிநிதி ஒருவர் இவ்வாறு கவலை தெரிவித்தார்.

வலி. வடக்கில் மீள்குடியமரும் மக்களுக்கான செயல் திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் குறித்துக் கேட்டபோதே அவர் இப்படித்தெரிவித்தார்.

வலி - வடக்கில் மீளக் குடியமரும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அளிக்கக் கூடிய வகையில் அவசர செயல் திட்டங்களை மேற்கொள்ள நாம் சம்மதம் தெரிவித்துள்ளோம். அத்துடன் மேற்கொள்ள வேண்டிய பணிகளையும் நேரில் பார்வையிட்டுள்ளோம்.

ஆனால் அத்திட்டங்கள் குறித்த விவரங்களை வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையோ, யாழ். செயலகமோ இன்னும் எம்மிடம் தரவில்லை. அத்திட்டங்கள் தரப்பட்டதும் உடன் பணிகளை ஆரம்பிக்க நாம் தயாராகவிருக்கிறோம்- என்றார்.

மீள் குடியமர்வுத் திட்டங்கள் செயற்படுத்தப்படாத காரணத்தால் மக்கள் தினமும் காலையில் இப்பகுதியில் உள்ள தமது வீடுகளுக்குச் சென்று மாலையில் திரும்பி விடுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## மாடுகளுக்கு புது வித நோய்

பொன்னாலை, மூளாய்ப் பகுதிகளில் மாடுகள் இடையே ஒருவித நோய் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோயினால் பாதிக்கப்பட்ட மாடுகள் வாயில் இரத்தம் கக்கி, எழுந்து நடக்க முடியாமல் பின்னர் இறந்து விடுவதாகக் கூறப்படுகிறது.

இந் நோய்குரிய காரணம் தெரியவில்லை. (ஐ-12)


## JAFFNA SCIENCE ASSOCIATION

### FIFTH ANNUAL SESSION AND GENERAL MEETING

Notice is hereby given that the fifth Annual General Meeting of the Jaffna Science Asscciation will be held on Tuesday the 26th of August, 1997 at 2.30 p.m. in the Physics Lecture Hall, University of Jaffna, Jaffna.

The Anuual Session will precede the AGM and will commence at 9.00 a.m.

The Programme for the Annual Session will be notified in due course.

**Prof. K. Chitravadivelu**
**General Secretary.**

Department of Botany,
University of Jaffna.
1997. 07. 23

(C/1176)



## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

### அப்பையா ஜெயராசா

14-6-97 அன்று பெருமாள் கோயிலுக்கு அண்மையில் நடைபெற்ற அசம்பாவித சம்பவத்தில் அகால மரணமடைந்த அப்பையா ஜெயராசாவின் இல்லத்தில் நாளை 24-7-97 வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரைக் கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் காலஞ்சென்ற அப்பையா ஜெயராசா அவர்களின் மரணச்சடங்கிலும், இறுதிக்கிரியையிலும் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை வழங்கியவர்களுக்கும் பல வகையில் உதவி வழங்கியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர், உறவினர்.

(48528)



## இதய அஞ்சலி

### பொ. சரவணப்பெருமான்

எமது சக மாணவி
**செல்வி ச. அனுஷாதேவி**

அவர்களின் அன்புத்தந்தையார் எதிர்பாராதவேளையில் இவ்வுலக வாழ்வை நீத்தமைக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

ஆசிரியர் குழாம்,
97 வர்த்தகப் பிரிவு
மாணவ, மாணவிகள்.

ஞானோதயா அக்கடமி,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

(48526)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை நிறுவனங்களை இணைத்து

# ஐ. நா. மத்திய நிலையம் யாழ். நகரில் அமைப்பு

யாழ். குடாநாட்டில் பணிகளை மேற்கொண்டுள்ள ஐ.நா.வின் கிளை அமைப்புக்கள் ஒன்றிணைந்து ''ஐ. நா மத்திய நிலையம்'' ஒன்றை யாழ். நகரில் அமைத்துள்ளன.

ஐ. நா வின் உப அமைப்புக்களான அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், ஐ. நா. அபிவிருத்தி திட்டம், ஐ. நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம், உலக உணவுத் திட்டம், உணவு விவசாய நிறுவனம் ஆகியன குடாநாட்டில் பல நிவாரணப் பணிகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும்மேற்கொண்டுவருகின்றன

இந்த அமைப்புக்கள்யாவும் ஒருங்கிணைந்துபணியாற்றும் வகையில் இந்த மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் அமைந்துள்ள கட்டடத் தொகுதியில் இந்த அமைப்புகள் தனித்தனி அலுவலகங்களைத் திறந்துள்ளன.

விரைவில் ஐ. நாவின் பல கிளை அமைப்புக்கள் அங்கு வந்து செயற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-3)

# முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகருக்கு பொலீஸ் உயர் அதிகாரி மிரட்டல்!

## அவசரகாலச் சட்ட நீடிப்பை மு. கா. பகிஷ்கரிக்கும்

கொழும்பு, ஜூலை 23

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை அடுத்த தடவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது முஸ்லிம் காங்கிரஸ் அதைப்பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

புத்தளம் மாவட்டத்தில் பணியாற்றும் பொலீஸ் அதிகாரி ஒருவர் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் இலியாஸ் உட்பட முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்களுக்கு கொலைப்பயமுறுத்தல் விடுத்துள்ளார் என்றும்-

அவரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும்-முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான அஷ்ரப் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நாடாளுமன்றத்திலும் குரல் எழுப்ப முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

இக் கோரிக்கை தொடர்பாக அரசாங்கம் சாதகமான பதில் தராதபட்சத்தில் அவசரகால நீடிப்பு பிரேரணை விவாதத்தைப் பகிஷ்கரிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது என்று முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஐ-21-3)

# இலங்கைத் தமிழருக்கு உதவ கனடாவில் 'துயர்துடைப்பு வாரம்'

வவுனியா, ஜூலை 23

இலங்கையில் இன்னல்களை அனுபவிக்கும் தமிழ் மக்களுக்கு உதவ கனடாவில் துயர் துடைக்கும் வாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கனடாவில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கடந்த ஜூலை 12 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை பிரகடனம் செய்த இந்த வாரத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு உதவ நிதிசேகரிக்கும் பணியில் அது ஈடுபட்டது.

உண்டியல் குலுக்கி வீதி வீதியாக இந்தப் பணியில் புனர்வாழ்வுக் கழக தொண்டர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இலங்கைத் தமிழர் வாழும் பிரதேசங்களில் மட்டுமன்றி கனேடிய மக்கள் வாழும் பிரதேசங்களிலும் இப் பணிக்கு நல்ல ஆதரவு கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-164-3)

## கொழும்பு ஆள்சேர்ப்பு நிலைய

# தமிழ்ப் பெண் பொலீஸின் திடீர் மரணத்தில் மர்மம்

கொழும்பு, ஜூலை 23

கொழும்பு மலல சேகர பிளேஸில் உள்ள றிசேர்வ் பொலீஸ் ஆள்சேர்ப்பு நிலையத்தில் பணியாற்றிய தமிழ் பெண் பொலீஸ் ஒருவரின் மரணத்தில் மர்மம் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 16 ஆம் திகதி சாந்தி சுப்பிரமணியம் என்னும் இந்தத் தமிழ்ப் பெண் பொலீஸ் வேலை முடிந்து அவிசாவளையில்உள்ள தமது வீட்டுக்கு பஸ்ஸில் சென்று கொண்டிருந்த சமயம் மயங்கி வீழ்ந்தார். அவர் உடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த இவர் சில தினங்களில் மரணமாகி விட்டார்.

இவரின் மரணம் குறித்து விசாரணை நடத்திய கொழும்பு திடீர் மரண விசாரணை அதிகாரி எட்வேட் அகங்கம இந்தப் பெண்ணின் உடலில் நஞ்சு கலந்திருந்ததாக வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்றும்— இம்மரணம் குறித்து பூரண விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும்— பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இரு வருடங்களுக்கு முன்னர் இவர் திருமணம் செய்து கொண்டார் என்றும்—

அவருக்கு குழந்தை ஒன்று உண்டு என்றும்— தெரிவிக்கப்பட்டது.

மயக்கமடைந்த பின்னர் இவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற சமயம் தமது குழந்தைக்கு இவர் பாலூட்டினார் என்றும்— அதனையடுத்து அவரது குழந்தையும் மயக்கமடைந்தது. பின்னர் அக்குழந்தை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று சுகமடைந்ததாகவும்— தெரிவிக்கப்பட்டது. (ஐ-100-3)

## பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 23

முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 12ஆவது குருபூசை தினத்தையொட்டி தொண்டமானாறு செல்வச்சந்நிதி சந்நிதியான் ஆச்சிரமம் பாடசாலை மாணவர்களிடையே போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

மூன்று பிரிவுகளாக நடத்தப்பட இருக்கும் போட்டிகளில் குறட்பா அறிவுப் போட்டி, பேச்சுப்போட்டி ஆகியன இடம் பெறவுள்ளன. இதில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள்தாங்கள்கல்விகற்கும்ஆண்டு, பாடசாலை என்பவற்றின் விவரங்களை தமது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் தபால் மூலம் அல்லது நேரடியாக கையளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# உயிலங்குளம் ஊடாக மீண்டும் போக்குவரத்து

மன்னார் உயிலங்குளம் தடைமுகாமில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட 9 சிப்பந்திகளையும் விடுதலைப் புலிகள் விடுதலை செய்ததையடுத்து, உயிலங்குளம் ஊடான போக்குவரத்து நேற்று முன்தினம் முதல் வழமைக்குத் திரும்பியது.

வன்னியில் இருந்து மன்னார் நகருக்குச் செல்லும் பாதையில் உயிலங்குளத்தில் அமைக்கப்பட்டிருக்கும் தடைமுகாமில் பணியாற்றிய 9 சிப்பந்திகளைக் கடந்த வாரம் விடுதலைப் புலிகள் கடத்தியதையடுத்து இப் பாதையூடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. (ஐ-164-3)

# முல்லைத்தீவில் கடும்மழை; இடம்பெயர்ந்தோர் பாதிப்பு!

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

காட்டுப்பகுதிகளில் மரங்களுக்குக் கீழும், வீதியோரங்களிலும் கூடாரம் அமைத்து வாழ்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கடும் மழை, வெள்ளம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் குடிசைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் தமது உடைமைகளை இழந்து இருப்பிட வசதிகள் இன்றி வீதிகளில் அலைந்து திரிகின்றனர்.

மழை பெய்ததால் தீவிரமாகப் பரவிவந்த கண்நோய் போன்ற தொற்று நோய்கள் குறைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் -அதே சமயம் புதிய தொற்றுநோய்கள், நுளம்பு என்பன பரவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது. (ஐ-164-3)

# மஹ்ரூப்பின் இடத்துக்கு ஆரியபால நியமனம்

திருகோணமலை, ஜூலை 23

திருகோணமலை மாவட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப் படுகொலை செய்யப்பட்டதையடுத்து அவரது இடத்துக்கு ஐ. தே. க. உறுப்பினரான டபிள்யூ. ஆரியபால நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவிருக்கிறார்.

திருகோணமலை மாவட்டத்தில் இரு இடங்களைப் பெற்றிருந்த ஐ. தே. கவின் முதலாவது எம். பியான மஹ்ரூப் கொலை செய்யப்பட்டதையடுத்து மூன்றாவது இடத்தில் இருந்த டபிள்யூ. ஆரியபால முதலாவது எம்.பியாக நியமனம் பெறுகிறார். (ஐ-150-3)

# இவ்வருடம் 60 உதவித்திட்டங்களை ஐ. நா. தூதரகம் செயற்படுத்தும்

## யாழ். வதிவிடப் பிரதிநிதி தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 23

குடாநாட்டில் சுயவேலை வாய்ப்பை ஊக்குவிக்கும் வகையில் 60 செயல் திட்டங்களை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இவ்வருடத்தில் செயற்படுத்தவுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக யாழ். வதிவிடப் பிரதிநிதி வரோலி பபியோ மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு திட்டமிட்டு மேற்கொள்ளப்படாத 15 திட்டங்களும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்படும்.

அத்திட்டங்களுடன் சேர்த்து இவ்வாண்டு முடிவுக்குள் 60 செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்த முனைந்துள்ளோம்.

ஏற்கனவே பல திட்டங்கள் செயற்பட ஆரம்பித்துள்ளன. இவ்வாரம் 20 முதல் 25 திட்டங்கள் குறித்து முடிவு செய்யவுள்ளோம்.

மக்கள் மீள் குடியமரும் பகுதிகளில் அவர்களின் அடிப்படை வசதிகளான சுகாதாரம், குடிதண்ணீர், சமூக அபிவிருத்தி ஆகியவற்றை மேம்படுத்தும் வகையிலான திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்படும்.

குடாநாட்டில் பரவலாக சகல பகுதிகளிலும், பிரதேச செயலர்களின் உதவியுடன் எமது திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன — என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## தப்பியோடிய படையினருக்கு

# மன்னிப்பு வழங்கும் கால அவகாசம் நீடிப்பு

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொது மன்னிப்புக் கால அவகாசம் எதிர்வரும் சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி பொதுமன்னிப்பு அறிவிக்கப்பட்டபின்னர்இதுவரைசுமார் 3ஆயிரம் பேர் கடமைக்குத் திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கால அவகாசம் நேற்று முன்தினம் மாலை முடிவடைய இருந்த சமயம் மீண்டும் இராணுவத்தில் சேர்ந்து கொள்வதற்காக அன்றுபெரும்எண்ணிக்கையானவர்கள்வருகை தந்திருந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் கூறுகிறது.

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களின் குடும்பத்தினர் விடுத்த வேண்டுகோள் காரணமாக இந்தப் பொது மன்னிப்புக் கால அவகாசத்தை நீடிக்க இராணுவ தளபதி றொஹான் தலுவத்த முன்வந்துள்ளார் — என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் சனிக்கிழமை நள்ளிரவுக்கு முன்னர் கடமைக்குத் திரும்பாதவர்கள் இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவர் என்று இராணுவத்தினரின் அறிக்கை எச்சரித்துள்ளது.

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோருக்கும் அல்லது அவர்களை வேலைக்கு அமர்த்துவோருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## கூட்டம்

காரைநகர் மத்தி கிராம அபிவிருத்திச் சங்க புனரமைப்புக் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு சிவகாமி அம்மன் கோயிலடியில் உள்ள சங்க முன்றலில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கலைமகள் சிவராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இக் கூட்டத்துக்கு பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம், ஈ.பி.டி.பி. அமைப்பின் தீவுப்பகுதி உதவி அரசியல் பொறுப்பாளர் ந. லோகன், காரைநகர் மக்கள் குழுத் தலைவர் ஆ. சிற்றம்பலம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

காரைநகர் மத்தி கிராம சேவை அலுவலர் எஸ். கே. சிவலிங்கம் இந்த கூட்டத்துக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். (ஐ-3)

# மருத்துவ நூல் இலவசமாக விநியோகம்

கொழும்புத்துறை, ஜூலை 23

புலோலி மேற்கு விநாயகர் தருமநிதியம் இலவசமாகப் பொது அமைப்புகளுக்கு ''உடல் நலவாழ்வும் மூலிகை மருத்துவமும் உணவு வகைகளும்'' என்ற நூலை வெளியிட்டுள்ளது.

நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் நேரில் தொடர்பு கொண்டு இப்நூலைப் பெற [illegible] நிறு [illegible] பிள்ளை தெரிவித்துள்ளார். (ஐ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும் இல. 15, 6 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [48504]

இறைச்சிக்கோழி புறோயிலர் (Broiler), விற்பனைக்கு உண்டு. தொடர்பு: No.141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [48508]

### தவறிவிட்டது

சின்னையா சிவபாதமலர் என்பவரது விசேட அடையாள அட்டை இலக்கம் 0907017494 உரும்பிராய்ச் சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கைதடி, நுணாவில் கிராஞ்சிலேன், சாவகச்சேரி, கந்தையா என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [48503]

P. சந்திரசேகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 730664257V உடையது. இணுவிலுக்கும் தட்டாதெருச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும்முகவரியில் ஒப்படைக்கவும்,'ராஜாகிறீம்ஹவுஸ் 36, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். [48521]

### விற்பனையாகின்றது

இந்து நாகரிகம் i, ii, தமிழ்மொழி i, ii 1997ஆம் ஆண்டுக்கான A/Lபரீட்சைக்கு அமைய மாதிரி வினாவிடை வடிவிலமைந்தது. புதிய பதிப்பு:- ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (48450)

### 6 — 11

ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் விசேட பெறுபேறடைய எல்லாப்பாடங்களும் வாரம் 5 மணித்தியாலங்கள் கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [48501]

### புத்தகப்பிரியர்களே!

உங்கள் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய பயன்மிகு நூல்களைப் படித்துப்பயன் பெற விஜயம் செய்யுங்கள் ''லிங்லெண்டிங் லைப்ரறி'' 41, தபாலக வீதி, சாவகச்சேரி, தொடர்பு:'லிங்லெண்டிங் லைப்ரறி' சாவகச்சேரி. [48401]

### அறைவாடகைக்கு

யாழ் பகுதயில அறை (U.NI.T) வாடகைக்கு உண்டு. வாடகை 300/- ந. விகினேஸ்வரன் ஆச்சாரி 426 (302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம், (வண்ணை சிவன் சந்தி). [48525]

### மணமகன் தேவை

வயது 29, நட்சத்திரம மூலம் 2 ஆம் பாதம் ஐரோப்பிய நாட்டில் தொழில்புரியும் மணமகனுக்கு வெளிநாட்டில் அல்லது, உள்நாட்டில் மணமகள் தேவை. கனடாவில் வசிப்பவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு: No. B/07 C/o நாதன்கூல்பார், சங்கத்தானை, சாவகச்சேரி. (சி/1165)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 08-04-1959

உதிர்வு: 26-07-1994

### சபாபதி மதனறாஸ்

ஓம் சாயிராம்
எங்கள் அன்புச் செல்வமே!
ஆண்டு மட்டுமல்ல
நாள் தோறும்
வெள்ளை உள்ளம் கொண்ட உங்கள்
மனமும் உருவமும் எங்கள் நெஞ்சில்
உறைந்திருக்கும் ஐயா.

எங்களை மானத்தோடு வாழவைத்தமாயவனே உமது ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
சகோதரி, மனைவி, பிள்ளைகள்.

தகவல்:-
சி. சபாபதி,
டச்சுறோட்,
சாவகச்சேரி.

(48499)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



### அமரர் தாமு. சங்கரப்பிள்ளை
[சின்னச் செட்டியார்]

திதி: ஆனி மாத அபரபக்க பஞ்சமி

பூவுலகில்: 03 — 10 — 1934

பொன்னுலகில்: 24 — 06 — 1997

''சார்ந்து நின்ற சிவப் பணியென்ன
சமூகப் பணிகளென்ன
ஆர்ந்து நின்ற அருமையையா
அமைவழிதான் நன்றாக!

எமது அன்புத் தெய்வத்தின் அமரத்துவ செய்தி கேட்டு நேரிலும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், இறுதிக் கிரியைகளின் போது உடனிருந்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதுடன், எமது இல்லத்தில் 24-07-1997 வியாழக்கிழமை முற்பகல் நிகழவிருக்கும் மேற்படி கிரியாதிகளிற் கலந்து கொண்டு எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும், மதிய போசனத்திற் கலந்து சிறப்பிக்குமாறும் உற்றார், உறவினர், அன்பர்கள், இறுதியஞ்சலியில் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட விஞ்ஞான பீட மாணவ, மாணவியர், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர், மாணவர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவில் துயருறும்
குடும்பத்தினர்

கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(சி/1163)

## உரம் விநியோகம்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 80 மூடை பொட்டாஸ் (எம். ஓ. பி) உரத்தை முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கவுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய், மானிப்பாய்வீதியிலுள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உப அலுவலகத்தில் வைத்து இந்த இலவச உர விநியோகம் நடைபெற விருப்பதாகவும் உரம் பெற வரும் விவசாயிகள் கூடவே வெற்றுப்பை ஒன்றுடன் வருமாறும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் செயலாளர் ப. சிவநாதன் தெரிவித்துள்ளார். (ஐ-4)

### பாலர் ஆசிரியராக..

மேற்படி பயிற்சிபெற க.பொ.த (சா/த) தகைமையுடையோரும், மேல் தகைமையுடையோரும் தபால் வழியில் ஆறுமாதத்தில் பயிலலாம்.

**பாலர் ஆசிரியர் சங்கம்**
20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(47335)

## அரசு முன்வைக்கும் எதையும் பிரபாகரன் ஏற்றுக்கொள்வாரா?

### அஸ்கிரிய பீடாதிபதி கேள்வி

"அரசாங்கம் இனப்பிரச்சினையைத் தீர்க்க எதைச் செய்தாலும் அதை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஏற்பாரா என்பது ஐயமே."

அஸ்கிரிய பீடாதிபதி சந்தானந்ததேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டார நாயக்காவின் அரசியல் வாழ்வின் 20 ஆண்டு நிறைவினை ஒட்டிய வைபவம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டியில் தம்மைச் சந்தித்து ஆசி பெற்ற அனுராவுக்கு நன்றி தெரிவித்த பீடாதிபதி அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

தொடர்ந்து அழிவுகள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் அரசின் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் அமைந்தால் நல்லது.

இந்த அதிகாரப்பரவலாக்கல்யோசனைகள் நல்ல முறையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை அரசு கொண்டுவந்தாலும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் அதை ஏற்பாரா என்பது தெரியவில்லை.

தமிழ்க்கட்சிகள் தமது பல்வேறு கோரிக்கைகளை அதிகாரப்பரவலாக்கல் யோசனையில் சேர்க்க வேண்டும் என்று கூறுகின்றன. எத்தகைய தீர்வு நாட்டுக்கு ஏற்புடையது என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும்— என்றார். (ஐ-3-150)

## நெடுந்தீவு மின் விநியோகம் விரைவில் விஸ்தரிக்கப்படும்

நெடுந்தீவு, ஜூலை 23

நெடுந்தீவுப்பகுதிக்கான மின் விநியோகம் விரைவில் நெடுந்தீவு மத்தி சிக்கிரியாம் பள்ளம் வரை விஸ்தரிக்கப் படவுள்ளது.

தற்சமயம் கிழக்கு மாவிரித்துறைமுகத்தில்இருந்து உதவி அரசாங்க அதிபர் பணிமனை வரையிலான பகுதிகளுக்கு மின் வழங்கப்படுகிறது.

சிக்கிரியான்பள்ளம் வரை மின் விநியோகம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதால் பிரதான வீதியை அண்மித்த மத்திய பகுதியில் உள்ள மக்கள் பெரிதும் பயனடைவர். (ஐ-111)

## ச.சமூக நிலையம் இயங்குகிறது

பருத்தித்துறை திரு நாவலர் நாவலர் சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டு தற்போது தலைவர் சி. கதிரமலை தலைமையில் மீண்டும் செய்யப்பட்டு வருகிறது. நிலைய வாசிகசாலையும் தற்போது இயங்குகிறது.

## வலி - கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# வாக்காளர் இடாப்பு

ஷ்டி சங்கத்தின் 1997 ஆம் ஆண்டுக்கான கிளைக்குழுத் தேர்தலுக்கான வாக்காளர் இடாப்பு 28-07-97 ஆம் திகதி வரை கிளைகளில் தொங்கவிடப்பட்டுள்ளன. வாக்காளர் இடாப்பில் பெயர் இடம் பெறாவிடின் அல்லது பெயர், விலாசம் என்பன தொடர்பாக ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் 28-07-97 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் எழுத்துமூலம் தெரிவிக்கலாம்.

ச குமாரசாமி
தலைவர்

கே. செல்விகாராணி
பதில் செயலாளர்.

(1174)

உ

தென் அளவையூர்

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

### அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு முடிவுகள்

அளவெட்டி தெற்கு வெளிவயல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு நடைபெற்ற அதிர்ஷ்ட இலாபச் சீட்டின் பரிசிற்குரிய இலக்கங்கள்

1) 898  2) 290  3) 460

(48522)

தர்மகர்த்தா சபை

## B. A., B. Com.

Part I & II

(அனேக மாணவரின் வேண்டுதலில்)
பிரிவு - II

- ★ வினாத்தாள் பற்றிய விசேட விரிவுரைகள்
- ★ பொருளியல், மெய்யியல், தமிழ், அரசறிவியல்
- ★ கணிதமும் — புள்ளிவிவரவியலும்.

**ஆரம்பம்: 26 - 07 - 97**

**காலம்:- மு. ப. 8-00, பி. ப.1-00**

## பேராதனை கல்வி நிலையம்

NO. 106B, கைலாசபிள்ளையார் கோயிலடி,
நல்லூர்.

(48516)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## எப்போது யாழ். வர முடியும்?

"சந்திரிகா முதலில் யாழ்ப்பாணம் சென்று திரும்பட்டும், அதன் பின்னர் நான் யாழ்ப்பாணம் செல்வேன்." என்று அநுரா பண்டாரநாயக்கா கண்டியில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை முழு அளவில் நிறைவேற்றக் கூடிய முறையில் சந்திரிகா இதுவரை செயற்படவில்லை. அவரது முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை.

அதேபோன்று அநுராவும் சுதந்திரக்கட்சியில் இருந்த போதோ அல்லது அதன் பின்னர் ஐ. தே. க வில் சேர்ந்து அமைச்சரான போதோ அல்லது தற்போதோ இனப்பிரச்சினை விடயத்தில் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறத்தக்க விதத்தில் நடந்து கொள்ளத் தவறி இருந்தார்.

ஆகவே இருவருமே யாழ்ப்பாணம் செல்லும் நிலையில் இல்லை என்றே கூற வேண்டும்.

ஜனாதிபதியோ அல்லது அமைச்சர்களோ சுதந்திரமாக யாழ்ப்பாணம் செல்ல முடியாத நிலைமை இன்று நேற்று ஏற்பட்டது அல்ல பல ஆண்டுகளாகவே இருந்து வருகிறது.

1995 இறுதியில் சூரியப் பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ்ப்பாணத்தை அரச படைகள் கைப்பற்றிய பின்னர் படையினரின் பாதுகாப்புடன் சில அமைச்சர்கள் வந்து போனார்கள். ஆனால் யாழ். நகரில் உள்ள கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்துக்கு முன்னால் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலின் பின்னர் அமைச்சர்கள் வந்து போவதும் நின்று விட்டது.

யாழ்ப்பாணம் வந்துபோவதில் அவர்கள் இரு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

ஒன்று பாதுகாப்புப் பிரச்சினை. பாதுகாப்புக்கள் எவ்வளவு பலப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நூறு சதவீத உத்தரவாதம் அளிக்க முடியாத நிலையில் படையினர் இருந்து வருகின்றனர்.

மற்றையது, பொதுமக்களின் வரவேற்பைப் பெறமுடியுமா என்ற பிரச்சினை.

படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் இருந்த உறவு இன்று இல்லை என்றே கூற வேண்டும்.

வீதிச் சோதனைச் சாவடிகளில் பொது மக்கள் எதிர் நோக்கும் சிரமங்கள், சுற்றிவளைப்புக்கள் மற்றும் சில சம்பவங்கள் காரணமாக இந்த உறவில் தாக்கம் இருந்து வருவதை எவரும் மறுக்க முடியாது.

ஆகவே தற்போதைய நிலையில் அரசு செய்யக் கூடிய ஒரே வழி யுத்தத்தை நிறுத்தி தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய தீர்வுப் பொதியை அமுல் செய்வதே.

அதுவும் அநுரா கூறியது போன்று விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பைப் பெறக் கூடிய தீர்வுப் பொதியே தற்போதைய பிரச்சினைக்கு ஒரே வழி ஆகும்.

அப்படியான ஒரு தீர்வுப் பொதியுடன் தெற்கில் இருந்து தலைவர்கள் வரும் போதே தமிழ் மக்களின் வரவேற்பை அவர்களால் பெற முடியும்.

# தபால் உத்தியோகத்தர் சங்கம் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

## கூட்டுத்தாபனமாக்குவதற்கு எதிர்ப்பு

கொழும்பு ஜூலை 23

தபால் திணைக்களத்தை கூட்டுத்தாபனமாக மாற்றுவது என அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் குறித்து தபால் தொழிற் சங்கங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன; தபால் தொலைத் தொடர்புகள் உத்தியோகத்தர்கள் சங்கம் நேற்று கொழும்பிலுள்ள மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திற்கு அருகே ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

தபால் துறையிலுள்ள 300 க்கும் அதிகமான தொழிற்சங்க உறுப்பினர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

அரசாங்கத்தின் தீர்மானத்தினால் தபால் திணைக்களத்தை சேர்ந்த 24 ஆயிரம் ஊழியர்களின் உரிமைகள் பாதிக்கப்படும் என்று தொழிற் சங்கத் தலைவர் எஸ். ரி. வி. விக்கிரம சிங்க தெரிவித்தார்

திணைக்களம் நட்டத்தில் இயங்குவதற்கு அப்பாவி ஊழியர்கள் காரணம் அல்லர் என்று தெரிவித்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள், பல்வேறு ஊழல் நடவடிக்கைகள் வீண் விரயங்கள் ஆகியவையே நட்டத்திற்கான காரணம் என்று கூறினார்கள்

(இ-4)

# குடாநாட்டுக்கான அ. அட்டைகள் கொழும்பு அலுவலகத்தில் தேக்கம்

## விண்ணப்பதாரர் இங்கு அலைகின்றனர்

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களின் ஆயிரக் கணக்கான அடையாள அட்டைகள் கொழும்பிலுள்ள யாழ்ப்பாண இணைப்பு அலுவலகத்தில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிய வந்துள்ளது.

கடந்த ஜனவரியின் பின்பும் 1996 பிற்பகுதியிலும் விண்ணப்பம் செய்தவர்களில் பலர் யாழ். செயலகத்துக்கு அலைந்து திரிந்த பின்னர் கொழும்பிலுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்துக்குச் சென்று விசாரித்த பொழுதே இது தெரிய வந்ததாம்.

இவர்களது அடையாள அட்டைகள் யாவும் கடந்த 23-05-97 இல் மேற்படி அலுவலகத்திடம் ஒப்படைத்துள்ளதாகவும் —

யாழ்ப்பாணம் சென்று இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் — திணைக்கள உத்தியோகத்தர்களுக்குக் கூறப்பட்டது.

ஆனால் இதுவரை யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு இந்த அடையாள அட்டைகள் வந்து சேரவில்லை.

இவற்றைப் பெறுவதற்காக அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஜி. சீ. ஈ. உயர் தர பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளும் மற்றும் பொது மக்களும் யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களத்துக்குதினமும் அலைந்து திரிவதையும் காண முடிகிறது.

(இ-100)

# திருநெல்வேலியில் இருந்து குருநகர் தாங்கிக்கு தண்ணீர்

## ஜேர்மன் நிறுவனம் உதவும்

திருநெல்வேலியில் இருந்து குருநகர் தண்ணீர் தாங்கிக்கான குடிதண்ணீர் விநியோகம் அடுத்த இரண்டு மாதத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என யாழ். மாநகர சபையின் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''ஜி. ரி. சற்'' என்ற ஜேர்மன் நிறுவனத்தின் உதவியுடன் யாழ். மாநகரசபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் பவுஸர் மூலமான குடி தண்ணீர் விநியோகத்தின் அடுத்த கட்டமாக இது செயற்படுத்தப்படவிருக்கிறது.

இதற்கு முன்னேற்பாடாக சேதமடைந்துள்ள திருநெல்வேலிக்கும் குருநகருக்கும் இடையில் உள்ள நிலத்தடி குழாய்களைத் திருத்தும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட கரையோரப் பகுதிகளில் தற்போது பவுஸர் மூலம் சிறு சிறு நீர்த்தாங்கிகளில் நிரப்பப்படும் குடிதண்ணீரைப் பலர் வீண்விரையம் செய்வதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

'ஜி.ரி.சற்' நிறுவனத்தினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த பவுஸர் மூலமான குடி தண்ணீர் விநியோகம் கரையோரப் பகுதி மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

(இ-4)

## ரூ. 150 கோடி செலவில் கட்டப்படும்

# ஜனாதிபதி மாளிகையில் குடியேறப்போறவர் ரணிலே!

## அனுரா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 23

'150 கோடி ரூபா செலவில் புதிதாகக் கட்டப்படும் ஜனாதிபதி மாளிகையில் குடியேறப்போறவர் ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே எனது சகோதரி சந்திரிகா குமாரதுங்க அல்ல'

இப்படி ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடந்த வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் எண்ணம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இல்லை. தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருக்கவே அவர் விரும்புகிறார்.

ஜே. ஆர் ஜெயவர்த்தனாவிடம் ஒரு தடவை கேட்ட போது, ஒருவர் தொடர்ந்து பதவியில் இருக்கவே இந்தமுறை கொண்டுவரப்பட்டது என்று தெரிவித்தார்.

அதன் படி தொடர்ந்து ஜனாதிபதியாக இருக்கவே தற்போதைய ஜனாதிபதி விரும்புகிறார்.

நாட்டில் சமாதானத்தை கொண்டுவரப்போவதாக ஜனாதிபதி அடிக்கடி கூறி வருகிறார். சமாதானம் இப்போதைக்கு சாத்தியம் இல்லை என்பதே பெரும்பாலானோரின் கருத்து.

இன்றுள்ள நிலைமைக்கு அரசாங்கம் மட்டுமல்ல, தமிழ்க் கட்சித்தலைவர்களும் பொறுப்பேற்க வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-150)

# அனுராவின் அழைப்பை ஏற்று பெனாஸிர் நாளை வருகிறார்

கொழும்பு, ஜூலை 23

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ நாளை இலங்கை வருகிறார்.

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டார நாயக்காவின் 20 ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொள்ள வருமாறு அவருக்கு அனுரா அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை ஏற்று பெண் செயலாளர் ஒருவருடன் பெனாஸிர் நாளைவருகிறார். (இ-3-150)

## குளம் புனரமைப்பு

நவாலி, ஜூலை 23

கொய்யாத்தோட்டம் சுண்டுக்குளம் ஆழமாக்கப்பட்டு அரண் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கென 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (இ-100)

## ப. நோ. கூ. சவில் ம. எண்ணெய்

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கம் அதன் கிளைகள் மூலம் பங்கீட்டு அட்டைக்கு 2 லீற்றர் மண்எண்ணெய் விநியோகம் செய்து வருகின்றன.

இதன் காரணமாக சங்க எரிபொருள் நிலையத்தில் மண்எண்ணெய் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

(இ-100)

## போட்டிப் பரீட்சை

நவாலி, ஜூலை 23

இலங்கை கட்டடக் கலைஞர் சேவை வகுப்பு இரண்டு தரம் இரண்டுக்கு ஆள் சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான முடிவு திகதி 8-8-97 ஆகும்.

இது சம்பந்தமான முழு விவரங்களும் 27-6-97 திகதிய வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (இ-100)

## தமிழக மீனவர் 8 பேரும் கரைசேர்ந்தனர்

சென்னை, ஜூலை 23

கன்னியாகுமரி மாவட்டம் தூத்தூரில் இருந்து அண்மையில் கடலில் மீன்பிடிக்கச்சென்று காணாமற்போன 8 மீனவர்களும் இராமநாதபுரம் மாவட்டம் கீழைக்கரை என்ற இடத்தில் கரை சேர்ந்தனர்.

காற்றின் வேகம் காரணமாக இந்த மீனவர்கள் திசைமாறி கீழைக்கரை சென்றடைந்ததாக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் நேற்றுத் தெரிவித்தார். (இ-4)

## ஜெய்ப்பூர் 10 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்டத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர் வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் கலந்து கொள்வார்.

## மிதிவெடியில் கால்துண்டிப்பு

வீடுபார்க்கச் சென்றவர் திரும்பி வரும் போது மிதி வெடியில் சிக்குண்டு இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து உடுவிலில் வசித்துவரும் மூத்தான் அருந்தவம் (வயது 48) என்ற பெண்ணே மிதிவெடியில் சிக்கியவர் ஆவார்.

தாம் இடம்பெயர்ந்த ஆரம்பத்தில் இருந்த மருதனார் மடத்தில் உள்ள தமது வீட்டைப் பார்க்கச் சென்ற போதே இச்சம்பவம் இடம் பெற்றது.

நேற்று முன் தினம் இடம் பெற்ற இச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## ஷெல்லுக்கு இருவர் பலி!

கடந்த திங்கள் நள்ளிரவு வாழைச்சேனை இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று ஓட்டமாவடியில் வீடொன்றில் வீழ்ந்து வெடித்ததால் அந்த வீட்டிலிருந்த தந்தையும் மகனும் கொல்லப்பட்டனர். வேறு இருவர் காயமடைந்தனர்.

[இ-10-21]

## நாளை

ஆடி 08
வியாழக்கிழமை
திதி: பஞ்சமி
முன் இரவு 10.27வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
பிற்பகல் 3.03 வரை.

சுபநேரம்: 7.32-9.02
ராகுகாலம்: 1.32-3.02
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரடிப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 11 ஆயிரத்து 800 பேர் முல்லையில் நிவாரண உதவி இன்றித் தவிப்பு

கொழும்பு ஜூலை 23

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்து வந்துள்ள 11 ஆபிரத்து 800 பேர் நிவாரண உதவிகள் எதுவும் இன்றி உள்ளனர்.

இவ்வாறு முல்லைத்தீவு அரச அதிபர் எஸ். தர்மகுவசிங்கம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்து வந்த இந்த மக்களுக்கு உடனடியாக 3 நாள்களுக்கு சமைத்த உணவு வழங்கினோம் அதன் பின் ஒருவாரத்துக்கு தேவையான உலர் உணவு மட்டும் நிவாரணம்வழங்கிஉள்ளோம்

அதன் பின்னர் அவர்களுக்கு எந்தவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. ஆகவே அவர்களுக்கு நான்கு வாரத்துக்காவது உணவு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படி அவர் மேலும் கேட்டுள்ளார்.

(இ-3-150)

## சிறிசேன கூரே தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனு நேற்று நீதிமன்றில் விசாரணை

கொழும்பு, ஜூலை 23

சிறிசேன கூரேயை தடுத்து வைத்திருப்பது சட்டவிரோதமானது எனக் கூறி அவரது வழக்கறிஞர்கள் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனு நேற்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

ஜனாதிபதி சட்டத்தரணி கே. என். சொக்ஸி தமது வாதத்தை சமர்ப்பிக்கையில் சிறிசேன கூரே தடுத்து வைக்கப்பட்டிருப்பது பற்றி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் பொலிஸ்மா அதிபரும் முன்வைத்த காரணங்கள் முற்றாக ஆதாரம் அற்றவை என்று கூறினார்.

கூரேயை கைது செய்து தடுத்து வைத்திருப்பது சட்ட விரோதமானது என்றும் சொக்ஸி சொன்னார்.

பிரதி சொலிசிஸ்ரர் ஜெனரல் சீ.ஆர்.டி. சில்வா,விசாரணையாளர் தரப்பில் தனது வாதத்தை முன் வைத்தார்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் பொலீஸ் மா அதிபரும் சிறிசேன கூரேயை தடுத்து வைப்பதற்கு போதிய தகவல்களைப் பெற்றிருந்தார்கள் என்று டி. சில்வா கூறினார்.

அவசர கால பிரமாணங்களுக்கு அமையவே கூரேக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவித்த டி. சில்வா இந்நடவடிக்கை அடிப்படை உரிமைகளை மீறியதாக அமையவில்லை என்றும் கூறினார்.

உயர் நீதிமன்றம் 'தீர்ப்பு வழங்குவதை காலவரையறையின்றி ஒத்திவைத்தது.(இ-4)

## நீர்கொழும்பிலிருந்து படகொன்றில் ஆஸி. புறப்பட இருந்த 15 பேர் கைது

கொழும்பு, ஜூலை 23

நீர்கொழும்பில் இருந்து இயந்திரப் படகு ஒன்றில் சட்ட விரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்: அவர்களின் படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அந்த படகில் 50 பிளாஸ்டிக் கொள்கலன்களில் டீசலும் வரை படங்களும் இருந்தன என நீர்கொழும்பு பொலீஸார் தெரிவித்தனர்.

விசாரணையின் போதுதாங்கள் ஆஸ்திரேலியாசெல்லவே புறப்பட்டதாக அந்த 15 பேரும் ஒத்துக்கொண்டனர் என்று நீர்கொழும்புப் பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்கள் கைதாவதற்கு ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் தங்கள்படகு கடத்தப்பட்டதாக படகின் உரிமையாளர் ஒருவரால் பொலீஸாரிடம் முறையிடப் பட்டிருந்தது.

கடத்தப்பட்ட அந்தக் குறிப்பிட்ட படகே ஆஸ்திரேலியா செல்லத் தயார் நிலையில் இருந்த போது 15 பேருடன் பிடிபட்டது.

(இ-10-164)

மீண்டும் யாழ். நகரில்

ஜெயா அழகு மாடம் மீண்டும் யாழ். நகரில் இல. 127 கஸ்தூரியார் வீதியில்

தனது சில்லறை/மொத்த வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்கள் என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஜெயா அழகு மாடம்

இல. 127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(48491)

## 2 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வன்

### சிவபாஸ்கரன் சாரங்கன்

சாவகச்சேரியைச் சேர்ந்தவரும், சிவா நகைமாடம், சாரங்கா நகைமாடம், அருள்முருகன் நகைமாடம், ஆகியவற்றின் உரிமையாளருமான

**சிவபாஸ்கரன் ஞானாம்பிகை**

தம்பதிகளின் செல்வப் புதல்வன் சாரங்கன் இன்று (23-07-97) தனது இரண்டாவது பிறந்ததினத்தை இந்தியாவில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, கனடாவில் உள்ள சித்தப்பா, சித்தி, பெரியத்தை, மாமா, மச்சான்மார், ஆசைச் சித்தப்பா, சின்னத்தை, சாவகச்சேரியிலுள்ள சின்னச் சித்தப்பா, இளைய சித்தப்பா, ஆசையத்தை, அத்தை, யாழ்ப்பாணத்தில் உள்ள பெரியப்பா; பெரியம்மா, பெரியக்கா, அண்ணா, ஆசை அக்கா, சின்னக்கா, கனடாவில் உள்ள மாமா, மாமி, பெரிய மச்சான், சின்ன மச்சாள், ஜேர்மனியிலுள்ள அப்பப்பா, அப்பம்மா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வண்ணை ஸ்ரீவெங்கடேசரின் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று, பல கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

P. சிவபாஸ்கரன்,
"சாரங்கா நகைமாடம்",
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1168).

## கண்ணீர் அஞ்சலி

எமது செயலகத்தில் கடமையாற்றும்
திரு. க. பத்மநாதன்
நிதி உதவியாளர் அவர்களின் அருமை மகன்

### செல்வன் முரளிக்குமார்

அவர்கள் நோர்வேயில் அகாலமரணமடைந்தமையைக் கேள்வியுற்று ஆறாத் துயரடைந்தோம். அன்னாருக்கு எமது கண்ணீர் ததும்பும் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, துயருறும் குடும்பத்தினரின் துயரிலும் பங்கேற்கிறோம்.

பிரதேச செயலர், அனைத்து அலுவலர்களும்.
பிரதேச செயலகம், வலி. தெற்கு உடுவில்.

(48532)

## இலங்கை...

(முதலாம் பக்கம் பார்க்க)

மணிய சுவாமி தலைமையில் சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவர் பணிமனைக்கு முன்பாக ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்குத் தமிழகத்திலுள்ள எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்கவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தூதரகத்துக்கு முன்னே நடத்தவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணி குறித்து ஜனதா தளக்கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி கருத்துத் தெரிவிக்கையில் இது முதற்கட்ட நடவடிக்கை எனவும் இந்த நடவடிக்கை போதிய பயனளிக்கவில்லையெனில் அடுத்த கட்ட நடவடிக்கையாக தமிழக மீனவர்களுடன் படகுகளில் கச்சதீவுக்குச் செல்லவுள்ளதாகவும் தெரிவித்தார்.

[இ-10]

## ஜப்பானிய அன்பளிப்பு யாழ். விவசாயிகளுக்கும்

கொழும்பு, ஜூலை 23

இலங்கையின் விவசாய நடவடிக்கைகளை விருத்தி செய்ய ஜப்பானிய அரசாங்கம் 9 கோடி 70 லட்சம் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்களை நேற்று இலங்கைக்கு வழங்கியது

36 நாற்சக்கர உழவு இயந்திரங்கள், 25 இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் மற்றும் பல சாதனங்கள் இந்த அன்பளிப்பில் அடங்குகின்றன

இந்த அன்பளிப்புகளில் யாழ்ப்பாணத்திலுள்ள விவசாயிகளுக்கு நான்கு சக்கர உழவு இயந்திரங்களில் — 6, இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் — 5 வழங்கப்படும்; என்று தெரிவிக்கப்பட்டது.

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இவர்களின் லீவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

மட்டக்களப்பில் இருந்து தினமும் ஒருதொகை பொலீஸாரும், இராணுவத்தினரும் லீவில் செல்வது வழக்கம் என்றும்—

நேற்று முன்தினம் எவரும் லீவில் செல்லவில்லை என்றும்— தெரிவிக்கப்பட்டது.

(இ-3-150)

## விசாரணையில் பங்குபற்றக்கூடிய நிலையில் சசிகலா இருக்கிறார்

தமிழகத்தில் ஜெயலலிதாவின் ஆட்சியின்போது இடம் பெற்றதாகக் கூறப்படும் ஹோட்டல் ஊழல் வழக்கில் இரண்டாவது எதிரியான சசிகலா நீதிவிசாரணைகளில் பங்குபற்ற முடியும் என்றும் —

இதற்கு அவரது உடல் நிலை இடமளிக்கிறது எனவும் — மருந்துவ அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சசிகலா கடந்த வாரம் "ஸ்ரெச்சரில்" விசேட நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டது தெரிந்ததே.

கண்களை மூடியபடி இருந்த சசிகலாவிடம் நீதிமன்றத்தில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியுமா? எனவும் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியுமா? எனவும் நீதிபதி கேட்டார்.

சசிகலா எது வித பதிலையும் அளிக்காத காரணத்தினால் நீதிபதி சசிகலாவின் டாக்டரை அழைத்துசசிகலாவின் நோய் என்ன என்றும் இந்த நிலையில் அவர் எவ்வளவு காலத்துக்கு இருப்பார் என்றும் வினாவினார்.

சசிகலா இருதய நோயால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் —

ஒரு மாதம் வரையில் அவர் படுக்கையிலேயே இருக்க வேண்டி இருக்கும் என்றும் அவரது டாக்டர் பதிலளித்தார்.

இந்நிலையில் சசிகலாவைப் பரிசோதித்து அறிக்கைசமர்ப்பிக்குமாறு அரச மருத்துவமனைத் தலைவருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இவ்வாறு சசிகலாவை அரச மருத்துவ மனைக்கு அனுப்புவது விளக்க மறியலில் வைப்பதற்கு ஒப்பானது எனசட்டத்தரணிகள் வாதிட்டனர்.

சட்டத்தரணிகள் வாதிட்டுக் கொண்டிருந்தபோது சசிகலா கண்ணைத் திறந்து நடவடிக்கைகளை அவதானித்தார்.

நீதிபதியின் பணிப்பின் பேரில் அரச மருத்துவ மனைக்குக் கொண்டுசெல்லப் பட்ட சசிகலாவை பரிசோதித்த இரு மருத்துவ நிபுணர்களைக் கொண்ட குழு சசிகலா வழக்கு விசாரணையில் பங்கு பற்றக் கூடிய உடல் நிலையில் இருப்பதாகவும் —

தங்களுடன் கதைத்து பரிசோதனைகளுக்கு ஒத்துழைத்ததாகவும்—நேற்று அறிக்கை சமர்ப்பித்தது. (இ-10)

## 'வெற்றி உறுதி'...

(முதலாம் பக்கத் தொடர்)

இதனால் படை நகர்வு பாதிக்கப்பட்டதும் தெரிந்தவையே.

53 ஆவது படையணி தொடர்ந்து நெடுங்கேணியிலேயே நிலை கொண்டுள்ளது (இ)

## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்பு நகர பொலீஸ் உதவித் தலைமை அதிகாரி எம். எஸ். நிஸாம் தெரிவித்தார்.

அத்துடன் வீடு வீடாக இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையினை அதிகரித்ததினாலேயே அண்மைக் காலத்தில் அதிக எண்ணிக்கையானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்எனவும் —

சரியான ஆவணங்களை வைத்திருக்கும் எவரும் 24 மணி நேரத்திற்கு மேல் தடுத்து வைக்கப்படவில்லை எனவும்— அவர் கூறினகர்.

## ஈழத்...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர் கூறினார்.

தமிழர் பிரச்சினை இன்று இலங்கையில் தேசிய அரசியல் முக்கியத்துவத்தோடு பரிசீலிக்கப்படுவதற்கு முக்கிய காரணமாக இருப்பவர்கள் விடுதலைப் புலிகள்.

ஆனால் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பதை ஏற்க முடியாது.

லண்டன், வாஷிங்டன், கன்பரா போன்ற நகரங்களில் பாதுகாப்பான அறைகளில் இருந்துகொண்டு கனவு காண்பவர்களுக்காகப் பிரபாகரன் இங்கே சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்.

இப்படி கதிர்காமர் மேலும் கூறினார். (இ-10)

## மகரஹமவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அப்போது பணத்துக்குக் காவலாக சென்ற இரு பொலீஸாரும் கொல்லப்பட்டனர்.

சம்பவம் நிகழ்ந்தபோது அங்கு ஒரு வெள்ளைநிற வான் வந்ததாகவும்—

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் பணத்துடன் அந்த வானில் தப்பிச்சென்றுவிட்டார் என்றும்—

மற்றவர் மோட்டார் சைக்கிளில் ஓடித்தப்பிவிட்டார் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

(இ-10-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்23-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org